**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.246/2022 |
| Prosecution Witness | : | அ.சா.4 |
| Name | : | மருத்துவர் பாரத்குமார் |
| Father's/Husband Name: | : | பெருமாள் |
| Address : | : | அகரம் சிகூர் |
| Age | : | 37/2024 |

**தேதி: 11/09/2024**

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S.தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது ( **எதிரிகள் ஆஜர்** )

து நான் தற்போது அகரம் சீகூர் கால்நடை மருத்துவமனையில் கால்நடை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் அரும்பாவூர் கால்நடை மருத்துவமனையில் உதவி மருத்துவராக இருந்தேன். கடந்த 16.06.2019 அன்று நான் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது காலை 11.45 மணிக்கு அரும்பாவூர் வனக்காவலர்கள் இருவர்கள் வந்து இறந்துபோன மான் ஒன்றை எடுத்துவந்து சடலக்கூராய்வு செய்ய கேட்டுக்கொண்டனர். அதன்படி நான் மேற்படி இறந்துபோன மானின் உடலை பிரேதபரிசோதனை செய்தேன். அந்த மானின் வலதுபக்க கழுத்துபகுதியில் ஒரு குண்டடி பட்ட காயம் இருந்தது. வலது பக்க தோள்பட்டை பகுதியில் மற்றொரு குண்டடி பட்ட காயம் இருந்தது. வலது கண்ணுக்கும் கீழே ஒரு குத்து காயம் காணப்பட்டது. மானிற்கு ஏற்பட்ட காயத்தின் மூலம் இரத்தம் வெளியேறி பயத்தினால் மான் இறந்துவிட்டது என்று சான்று வழங்கினேன். மேலும் விவரங்களை

என்னுடைய பிரேத விசாரணை அறிக்கையில் விரிவாக குறிப்பிட்டுள்ளேன். **என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கை நான் வழங்கியதுதான். மானின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அது சம்பந்தமாக வேப்பந்தட்டை வன சரகர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இறந்துபோன மானின் உடலில் விறைப்புதன்மை இருந்தது. இறந்த இரண்டு மணி நேரத்திலிருந்து உடல் விறைக்க ஆரம்பித்துவிடும். இறந்துபோன மானின் உடலில் காணப்பட்ட குண்டடி காயங்களில் குண்டு வெளியேறியதற்கான அறிகுறிகள் இல்லை. உடலில் பால்ரஸ் இருந்தா என்றால் இல்லை. மானின் உடலில் இருந்த குத்து காயம் கூர்மையான ஆயுதங்களால் குத்தினால்தான் ஏற்படும் என்றால் சரிதான். கட்டையால் அடித்தால் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். மானின் வயிற்றுபகுதியில் எந்த காயமும் இல்லை. மானின் உடலில் காயப்பட்ட காயங்களில் கரு மருந்து காணப்படவில்லை. அயல்நாட்டு பொருட்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். மானின் உடலில் இருந்த காயங்களில் இரத்தம் உறைந்து காணப்பட்டது. வாயில் இருந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தது. உடலில் விறைப்பு தன்மை ஏற்பட்டபிறகு இரத்தம் சிந்துவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது பிரேத விசாரணை அறிக்கையில் குண்டடி பட்ட காயங்களில் இரத்தம் உறைந்து இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் இறப்பிற்கான காரணத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் மான்

எந்த நேரத்தில் இறந்திருக்கும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விசாரணை அதிகாரி என்னிடம் ஆயுதத்தை காட்டி இந்த ஆயுதங்களால் மான் தாக்கப்பட்டுள்ளதாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். குண்டடி காயங்களால் மான் இறந்துவிட்டதா அல்லது குத்து காயத்தால் மான் இறந்துவிட்டதா என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்துபோன மானின் உடல் சுமார் 25 கிலோ எடை இருக்கும்.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-.
Judicial Magistrate No.I,
Perambalur.

JM1, PBLR